Malaysia Nanban
17/07/2009
Page: 5
By: P.Sandirasekar
Section: General News
Region: Malaysia Circulation: 60000
Type: Malaysia - Tamil Newspapers
Size: 363.00 sq.cms
Frequency: MTWTFS





# ஈப்போ - சிங்கப்பூர் இடையிலான விமானச் சேவை தொடங்கியது

## டத்தோ எஸ்.வீரசிங்கம் பெருமிதம்

(ப.சந்திரசேகர்)

சிங்கப்பூர், ஜூலை 17-

ஈப்போ - சிங்கப்பூர் இடையிலான முதல் விமானச் சேவை தொடங்கப் பட்டுள்ள தன் மூலம் ஈப்போ மாநகர் வளர்ச்சி காண வித்திடப்பட்டுள்ளது என்று பேரா மந்திரி புசாரின் சிறப்பு ஆலோசகர் டத்தோ எஸ்.வீரசிங்கம் கூறினார்.

ஃபயர் பிளை விமானம் தனது முதல் விமானச் சேவையை நேற்று ஈப்போவிற்கும் சிங்கப்பூருக்குமிடையில் தொடங்கியது தொடர்பில் 25 பேராளர் குழுவினருடன் சிங்கப்பூர் வந்துள்ள அவர் இவ்வாறு கூறினார்.

பேரா அரசாங்க அதிகாரிகள், பத்திரிகையாளர்கள், சுற்றுலா துறையினர் ஆகியோர் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ மா ஹான் சூன் தலைமையில் நேற்று சிங்கப்பூர் வந்தடைந்தனர்.

இக்குழுவில் இடம் வெற்றிருக்கும் டத்தோ எஸ்.வீரசிங்கம் டத்தோஸ்ரீ ஜம்ரி மாநில மந்திரி புசாராக பொறுப்பேற்றது முதல் மாநில வளர்ச்சி திட்டத்தில் முழுக் கவனம் செலுத்தி வருகிறார் என்பதற்கு ஈப்போ - சிங்கப்பூர் இடையிலான விமானச் சேவை ஒரு எடுத்துக்காட்டு என்று கூறினார்.

நேற்று முன்தினம் சிங்கப்பூரிலிருந்து பயணிகள், பத்திரிகையாளர் குழுவுடன் ஈப்போ சுல்தான் அஸ்லான் ஷா விமான நிலையம் வந்து சேர்ந்த ஃபயர் பிளை விமானத்தில் பயணிகளை வரவேற்கும் நிகழ்வில் அவர் கலந்து கொண்டார்.

அதன் பிறகு ஈப்போவிலிருந்து பேராளர்குழு சிங்கப்பூர் புறப்பட்டது. வாரத்தில் நான்கு முறை விமானச் சேவையை தொடங்கியுள்ள ஃபயர் பிளை விரைவில் அன்றாடம் இச்சேவையை வழங்க ஆய்வு செய்து வருகிறது என்று நிறுவனத்தின் தலைவர் எடி லியோ கூறினார்.

ஈப்போவிற்கு எந்த ஒரு விமான சேவையும் இல்லாமல் இருந்து வந்தது தொடர்பில் வர்த்தகர்கள், பயணி களிடத்தில் பல்வேறான புகார்கள் எழுந்தன.

ஈப்போ அஸ்லான் ஷா விமான நிலையம் மீண்டும் பயன்படுத்தப்பட வேண்டும் என்று அவர்கள் விருப்பம் தெரிவித்தனர்.

பேரா மாநிலத்தின் பொருளாதார மீட்சிக்கு விமான சேவை ஒரு தூண்டு கோலாக இருக்கும் என்பதோடு இச்சேவை மூலம் முதலீட்டாளர்களை நம்மால் கவர முடியும் என்று டத்தோ எஸ்.வீரசிங்கம் இங்கு கூறினார்.

மாநிலத்தின் வளர்ச்சிப் பாதைக்கு வழி வகுத்து வரும் மந்திரி புசாரின் ஆற்றலுக்கு நாம் அனைவரும் துணை நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சிங்கப்பூருக்கு விமானச் சேவை ஏற்படுத்தப்பட்டுள்ளதன் மூலம் இரு வழி கலந்துரையாடல் இனி தொடர்ந்து நடைபெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்று கூறினார்.



**Malaysia Nanban**
**17/07/2009**



Page: 5
By: P.Sandirasekar
Section: General News
Region: Malaysia Circulation: 60000
Type: Malaysia - Tamil Newspapers
Size: 363.00 sq.cms
Frequency: MTWTFS



** சிங்கப்பூரிலிருந்து ஈப்போ வந்த பயணிகளை டத்தோ எஸ்.வீரசிங்கம் வரவேற்கும் காட்சி



** மலேசிய பேராளர் குழுவில் மலேசிய நண்பன் ஈப்போ நிருபர் ப.சந்திரசேகர்